**செய்தி வெளியீடு எண்: 597** **நாள்: 09.10.2012**

# <u>செய்தி வெளியீடு</u>

காவேரியில் தமிழகத்திற்கு உரிய பங்கினை பெற்றே தீர வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உறுதியான நடவடிக்கை மற்றும் விடாமுயற்சி காரணமாக, காவேரி நதிநீர் ஆணைய உத்தரவின்படி 20.9.2012 முதல் 15.10.2012 வரை நாளொன்றுக்கு 9,000 கன அடி தண்ணீரை தமிழகத்திற்கு விடுவிக்க வேண்டும் என்று கர்நாடகத்திற்கு உச்ச நீதிமன்றம் 28.9.2012 அன்று உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவினையடுத்து, 29.9.2012 முதல் தண்ணீரை விடுவிக்கத் துவங்கிய கர்நாடகம், நேற்று (8.10.2012) இரவு முதல் தமிழகத்திற்குரிய தண்ணீரை விடுவிப்பதை தன்னிச்சையாக நிறுத்திவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், காவேரி நதிநீர்ப் பிரச்சனை தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையில் இன்று தலைமைச் செயலகத்தில் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர், பொதுப் பணித் துறை செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில், இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பினை அவமதிக்கும் வகையிலும், தமிழகத்திற்கு விடுவித்துக் கொண்டிருந்த தண்ணீரை தன்னிச்சையாக நிறுத்தி, தமிழகத்திற்கு உரிய பங்கினை தர மறுக்கும் கர்நாடக அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்து, தமிழகத்திற்கு உரிய பங்கினை உடனடியாக பெற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவினையடுத்து, கர்நாடக அரசுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு உடன் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 9.10.2012